வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூன்- 2017
## Term Examination, June - 2017

| நாடகமும் அரங்கியலும் | தரம் :- 13 (2017) | புள்ளித்திட்டம் |
|---|---|---|

### பகுதி I

### விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1) க | 11) 4 | 21) 2 | 31) 5 |
| 2) 1 | 12) 4 | 22) 2 | 32) 1 |
| 3) 1 | 13) 3 | 23) 2 | 33) 2 |
| 4) 4 | 14) 5 | 24) 1 | 34) 2 |
| 5) 3 | 15) 3 | 25) 5 | 35) 5 |
| 6) 3 | 16) 3 | 26) 4 | 36) 1 |
| 7) 2 | 17) 4 | 27) 4 | 37) 1 |
| 8) 4 | 18) 4 | 28) 1 | 38) 4 |
| 9) 3 | 19) 1 | 29) 4 | 39) 2 |
| 10) 2 | 20) 1 | 30) 5 | 40) 1 |

The National e-learning Portal for The General Education

### பகுதி II

### விடைகள்

01.

1) நாடகமானது நிகழ்த்திக் காட்டப்படுவது
போலச் செய்வது
மோதுகையைச் சித்திரிப்பது
தொடர்பாடல் உடையது
ஓரிடத்தினை மையமாகக் கொண்டு பார்ப்போர் முன்னிலையில் நிகழ்த்திக் காட்டப்படுவதாகும்
நாடகம் பற்றிக் கூறினால் (02 புள்ளிகள்)

**2) ஒற்றுமை**
நாடகமும் இலக்கியமும் ஏதோவொரு கருப்பொருளை முன்வைத்துப் படைக்கப்படுகின்றன.

**வேற்றுமை**

| **நாடகம்** | **இலக்கியம்** |
|---|---|
| • நாடகம் நிகழ்த்திக்காட்டப்படுவது | - இலக்கியம் எழுத்து வடிவத்தைக் கொண்டது |
| • பாமரர் முதல் பண்டிதர் வரை இரசிக்க முடியும் | - கற்ற வாசகரால் மட்டும் நுகர முடியும் |
| • நடிப்பு முக்கியம் | - நடிப்பு முக்கியமில்லை |
| • நேரடிக்கலை | - வாசிப்புக்கலை |
| • பார்வையிளர் தூங்கல் உடன் வெளிப்படும் | - பார்வையாளர் தூங்கல் வெளிப்படுவதில்லை |

ஒற்றுமை எழுதப்பட்டிருப்பின் (03 புள்ளிகள்)
வேற்றுமை எழுதப்பட்டிருப்பின் (03 புள்ளிகள்)
(06 புள்ளிகள்)

| 3) <u>நாடகம்</u> | <u>சினிமா</u> |
|---|---|
| • நாடகம் அவைக்காற்றுக்கலை | - சினிமா தொழிநுட்பகலை |
| • ஆற்றுவோர், பார்போர் முன்னே நேரடித்தொடர்பு தாக்கம் செலுத்தும் | - நேரடித்தொடர்பு அற்றது |
| • காட்சிகள் நேரடியாக நிகழ்த்தப்படும் | - கமரா மூலம் பதிவுக்கு உட்பட்டே பார்க்கப்படும் |
| • அண்மித்துக் காட்ட முடியாது | - பாத்திரங்களின் முகங்களை அண்மித்து காட்டவும் தூரத்தில் காட்டவும் முடியும் |
| • ஆற்றப்படும் சந்தர்ப்பத்தில் மட்டும் பார்க்க முடியும் | - விரும்பிய நேரத்தில் பார்க்க முடியும் |
| • நிகழும் கணத்தில் இறந்து விடும் | - களஞ்சியப்படுத்தி வைக்கக் கூடியது |

வேறுபாடு எழுதியிருப்பின் (02 புள்ளிகள்)
விளக்கி எழுதியிருப்பார் (05 புள்ளிகள்)

02.

1) கதைப்பின்னல்
2) சிந்தனை
3) பாத்திரம்
4) சொற்திறன்
5) இசை / பாடல்
6) காட்சி

2) அரிஸ்ரோட்டில் குறிப்பிடும் கதாசிஸ்

- பரிவு, பயம் என்ற உணர்வு நிலையினூடே தேங்கிக்கிடக்கும் மனவெழுச்சி உணர்வு வெளியேற்றப்பட்டு உள்ளம் தூய்மைப்படும் என்பார். இந்நிலையை அரிஸ்ரோட்டில் கதாசிஸ் என்று கூறுவார்.
- கதாசிஸ் என்பதன் கருத்து உணர்ச்சி வெளிக்கொணர்கை என்பதாகும்
- அரங்கிலே உள்ள பாத்திரத்திற்கு ஏற்படுகின்ற மனப்போராட்டங்கள், மனச்சிக்கல்கள், மனச்சங்கடங்கள் எல்லாவற்றையும் பார்த்து அவற்றோடு ஒன்றி நிற்பதன் மூலம் தான் எம்முடைய கஸ்ர நிலைகள் பற்றிய தெளிவு எமக்கு உண்டாகின்றது. அப்படி உண்டாகின்ற பொழுது எம்முடைய மனநிலையிலே ஏதோ ஒன்றை அறிந்து விட்டது போன்ற உணர்வு வரும். அப்பொழுது நெஞ்சுப்பாரம் நீங்குவது போன்ற மனநிலை இருக்கும். இத்தகைய நிலையே கதாசிஸ் என்று சொல்லப்படுகின்றது.
- கதாசிஸ் என்பதனை உணர்ச்சி செப்பம். தூய்மைப்படுத்தல், புனிதப்படுத்தல் என்றெல்லாம் கூறுவர்
- கிரேக்க அவலச்சுவை நாடகங்களைப் பார்க்கும் போது இக்கதாசிஸ் ஏற்படும் என அரிஸ்ரோட்டில் கூறியுள்ளார்.
- அச்சம், இரக்கம் என்னும் உணர்ச்சிகளை தக்கவாறு பயன்படுத்திக் கொள்வதற்கு அவல நாடகம் பயன்படுகின்றது என்பது அவரது கருத்தாகும்.
- இரங்கும் இடத்து இரங்கி அஞ்சவேண்டும் இடத்து அஞ்சி உணர்ச்சிகளை செப்பமடைய செய்யும் நிலை கதாசிஸ் எனப்படும்.
(கதாசிஸ் பற்றி விளக்கியிருப்பின் 06 புள்ளிகள் வழங்கவும்)

3) காலம்
இடம்
பெயர்

(மூன்றையும் நாடக எழுத்துரு மூலம் விளக்கியிருப்பின் 06 புள்ளிகள்)

03.

1) கூத்து நிகழ்த்தும் வட்டக்களரி அரங்கு
   - தமிழர் பண்பாட்டில் கூத்து ஆடப்படும் அரங்காக வட்டக்களரி காணப்படுகின்றது
   - 7, அல்லது 8 தடிகள் நடப்பட்டு உச்சி வேய்ந்த கூரை அமைப்பினை உடையதாக காணப்படும்
   - நிலத்தடியிலிருந்து களி, மணல் போன்றவற்றால் 3 அடி உயர்த்தப்பட்ட மேடை
   - ஆடல் அமர்ந்தருந்து பார்ப்போர் நிகழ்த்துகயினை பார்த்து இரசிப்பர்

- அண்ணாவியார் பிரதான வகிபாகம் ஏற்பார்.
- சபையோர் காணப்படுவர்
- பார்ப்போருக்கும், நடிகளுக்கும் ஊடாட்டம் அதிகம்
- களரியை மையமாகக் கொண்டு ஆட்டக் கோலங்கள் வடிவமைக்கப்பட்டிருக்கும்
- பாத்திரங்கள் திரை அழைத்து வரப்படும்

படம் வரைந்திருந்தால் (02 புள்ளிகள்)
விளக்கியிருந்தால் (03 புள்ளிகள்)
(05 புள்ளிகள்)

2) அர்ச்சுனன் தபசு அரங்கு
- கோவில் முன்றலில் திறந்த வெளியில் மேட்டு நிலத்தில் இடம் பெறும்
- 15 அடி நீலமும், 15 அடி அகலமும் உடையது.
- தபசுக் கம்பம் 60 அடி உயரமுடையது
- தபசுக்கம்பை மையப்படுத்தியே அரங்கு அமையும்
- இதன் உச்சியில் அர்ச்சுனன் தபசு செய்யப் பீடப் அமைக்கப்படும்.
- இரவு 9 மணியிலிருந்து விடியும் வரை இடம் பெறும்
- தீப்பந்தம் வைத்து ஒளியை ஏற்படுத்துவர்

படம் வரைந்திருப்பின் (02 புள்ளிகள்)
விளக்கியிருப்பின் (03 புள்ளிகள்)
(05 புள்ளிகள்)

3) கிரேக்க அரங்கு
- கிரேக்க அரங்க நிகழ்த்துகையில் திறந்த வெளியானது முக்கியம் பெற்றது.
- மலைகளைப் படிப்படியாகச் செதுக்கி பார்ப்போர் அமர்ந்து கொண்டு நிலமட்டத்தில் உள்ள ஒகஸ்ரா ஆடுகளம் என்னும் இடத்தில் நிகழ்த்துகை இடம் பெற்றது.
- பார்ப்போர் அமரும் இடம், உடைமாற்றும் பகுதி உட்செல்லும் பாதை எம் இடங்களை உள்ளடக்கியது.
- அதிக அளவான பார்ப்போம் கலந்து கொள்வர்
- ஆற்றுகை பகலில் இடம் பெறும்
- அளிக்கைக்கு ஏற்ப பல பொறிகள் பயன்படுத்தப்படும்
- வேட உடை, வேடமுகம் போன்றன அளிக்கையில் முக்கியம் பெற்றுள்ளன.

The National e-learning Portal for The General Education

## பிரிவு B

1.

| | | | |
|---|---|---|---|
| 1) | நாடக | - | மகாநாடகம் என அழைப்பர் புகழ் பெற்ற தலைவன் தலைவி வரலாற்றைக் கூறுதல் |
| 2) | பிரகரண | - | ஆசிரியர் கற்பனைக் கூடாக கதை படைக்கப்படும். |
| 3) | ஸமவஹார | - | தேவர்கள் மற்றும் அசுரர்களை சேர்ந்ததா இருப்பதுடன் பலனைப் பெறுவதற்கு பலவகை உபாயங்களை பின்பற்றுவர். |
| 4) | ஈஹாமிருக | - | தெய்வத்தன்மை கொண்டவர்களாக இருப்பர் |
| 5) | டிம | - | செருக்குடன் கூடிய தலைவன் வரலாற்றைக் கூறுதல் |
| 6) | வியாயோக | - | புகழ் பெற்ற கதையினைக் கூறுவது |
| 7) | பிரஹசன | - | நகைச்சுவை வெளிப்பட்டு நிற்கும் நாடக வடிவம் |
| 8) | பாண | - | தனி நபர் நடிப்பைப் பிரதானமாகக் கொண்டது |
| 9) | வீதி | - | ஒன்று அல்லது இரண்டு அங்கங்களை பிரதானமாக கொண்டது |
| 10) | அங்க | - | ஓரங்க நாடகம் |

2.
- ஆங்கிகா அபிநயம்
- ஆஹார்ய அபிநயம்
- வாச்சிகா அபிநயம்
- சாத்வீகா அபிநயம்

நால்வகை அபிநயங்களைக் குறிப்பிட்டு விளக்கியிருப்பின் புள்ளிகள் வழங்கவும்

3.
1) பேட்டோல்ற் பிறைட்
   - 1930களில் காவிய அரங்கினை முன்வைத்தார்
   - அரங்குடன் தம்மை எப்போதும் விழிப்பு நிலையில் வைத்திருக்கக் கூடிய பார்ப்போரை மையப்படுத்தி காவிய பாணியை முன்மொழிந்தார்.
   - வரலாற்றை உருக்குபவர்களாகவும் உலகப்போக்கை மாற்றுபவர்களாகவும் பார்ப்போரை அரங்கினூடாக வடிவமைக்க முற்பட்டார்.
   - அரங்கானது “மனதைப் புத்துயிர்ப்பூட்டுவதற்கான இடம் மட்டுமன்றி சமூகக் கட்டுமானத்திற்கான, சமூக மாற்றத்திற்கான ஆய்வு கூடக் கருவியுமாகும் என நம்பினார்.
   - அந்நியப்படுத்தல் நடிப்புமுறை உத்திளாக பின்வருவனவற்றை கையாண்டார்.
   - சமூக வரலாற்றுக் கதைச் சம்பவங்கள்

2) நடிப்பில் செய்து காட்டல்
3) கதைப்பின்னல் சம்பவங்களின் கோவையாகத் தொழிற்படல்
4) பார்ப்போருக்கு ஊடாக அரங்கில் பிரவேசித்தல்
5) காட்சிப் பொருள்கள் குறியீடுகளாகவும், நாடகம் தொடங்க முதலிலே பார்ப்போருக்கு தெரியக்கூடிய வகையிலும் காட்சிப்படுத்தல்
6) குறியீட்டு இசைப் பிரயோகம்
7) பாத்திரங்கள் தம்மை படர்க்கையில் அறிமுகம் செய்தல்
8) சம்பவங்களை எடுத்துரைக்கும் பண்பு

4. இலத்தீன் அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவர்
   - பார்போரை மையப்படுத்தியதாக அரங்கை முன்வைத்தவர்
   - அரங்கில் பார்ப்போரின் பங்கு கொள்ளல் செயற்பாட்டினை வலியுறுத்தினார்.
   - ஒடுக்கப்பட்டோர் தமது உணர்ச்சிகளை வெளிப்படுத்த அரங்கினைத் தமது கையில் ஏந்திச் செயலாற்றுவதன் சமூகத் தேவையை வலியுறுத்தினார்.
   - நாடகத்தின் முடிவுகளை தாமே கண்டறிந்து கொள்வதற்கும் அரங்குகள் வாய்ப்பளிக்க வேண்டும் என விரும்பினார்.
   - கலந்துரையாடல் அரங்க படிம அரங்கு கண்ணுக்கு புலனாகாத அரங்கு உடனடி அரங்கு என பல ஆதர வடிவங்களை அறிமுகம் செய்தார்.
   - நாடகத்தை பிரயோக அரங்க நுட்பங்களுடன் வடிவமைத்தார்.
   - அரங்கை சமூகக்களை, உளவியல் களை நீக்கத்துக்கான ஒன்றாகவும் வடிவமைத்தார்.

5. சீன பீஜிங் ஒபேரா
   - பாடல் இசை முதன்மை
   - சீன அரங்கின் பிரதான கலை வடிவம்
   - மேட உடை அணிவதன் மூலம் அதன் திறன்களை வைத்து பாத்திரங்களை இனங்காணல்
   - கட்புலக்காட்சி கண் உடம்பு அசைவுகள் மூலம் வெளிப்படும் டான், செங், யிங், செள போன்ற வகை மாதரிப் பாத்திரங்கள் உள்ளன.
   - காட்சிகள் குறியீடாகக் காட்டப் பெறும்

6. சிங்கள தட்டயக்கும்
   - தென் மாகாணத்தில் பிரபல்யம் பெற்ற சிங்கள வடிவம்
   - பெண்கள் சம்பந்தப்பட்ட சடங்காகும்
   - பெண்களின் மலட்டுத்தன்மையை போக்குவதற்காக செய்யப்படுவது

**பலே**
   - ஆடல் முதன்மை
   - இத்தாலியில் ஆரம்பம்
   - பிரான்சிலும் மிகப் பிரபல்யம் பெற்றது
   - பாடலுக்கு ஏற்றவாறு உடல் அசைவுகளுக்கூடாக உணர்வுகள் வெளித்தெரியுமாறு ஆடுவார்.

**டித்திறாம்**

- திறஜடி நாடகத்துடன் தொடர்புபடும் பாடல்
- டயோனியலை புகழ்ந்து பாடுவது
- டயோணியலின் உயிர்ப்புடன் தொடர்புடையது
- பலரால் பாடப்படும் பாடல்
- ஆரம்பத்தில் டயோனியவுடன் மட்டும் தொடர்புடையது
- ஏரியன் மாற்றம் ஏற்படுத்தியவர் (உள்ளடக்க ரீதியான உருவம் ரீதியாக)
- கூட்டுப்படலாக்கினர், இலக்கிய அந்தஸ்து கொடுத்தார் இசை கலந்துபாடும் முறைமை, டயோனியஸ் விழாவில் 2ம், 3ம், 4ம் நாளில் இப்பாடல் போட்டி இதைப்பாடும் கோரசில் இருந்து நடிகன் தோற்றம், தெஸ்பிஸ்

**பூர்வரங்க**

- நாட்டியச ாஸ்திர அரங்குகளின் ஆற்றுகைக்கு முன் இடம் பெறும் வழிபாடு
- நாத்திமங்கலம் என்பர்
- இதன்பே நடியும் சூத்திரதாரனும் தோன்றி கதையை அறிமுகம் செய்வர்
- 10 வகை நாடகங்களிலும் பூர்வரங்கம் இடம் பெற்றே ஆற்றுகை இடம் பெறும்
- சடங்குப் பண்பு கொண்டது
- தடைகள் எதுவும் ஏற்படாமல் இருக்க இது நடத்தப்படுகிறது.
- நடிகனுக்கு நம்பிக்கையூட்டும் செயற்பாடு
- பார்வையாளருக்கு நம்பிக்கையை ஊட்டும்
- சாகுந்தலத்தில் இப்பண்பு காணப்படுகிறது
- பாடல் வடிவில் அமைந்துள்ளது.

The National e-learning Portal for The General Education

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூன்- 2017
## Term Examination, June - 2017

| நாடகமும் அரங்கியலும் | தரம் :- 13 (2017) | புள்ளித்திட்டம் |
|---|---|---|

### பகுதி I

**விடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 1) 4 | 11) 4 | 21) 3 | 31) 3 |
| 2) 5 | 12) 3 | 22) 5 | 32) 5 |
| 3) 5 | 13) 3 | 23) 4 | 33) 2 |
| 4) 3 | 14) 5 | 24) 1, 4 | 34) 2 |
| 5) 1 | 15) 2 | 25) 2 | 35) 2 |
| 6) 1 | 16) 2 | 26) 2 | 36) 5 |
| 7) 4 | 17) 1 | 27) 1 | 37) 1 |
| 8) 4 | 18) 2 | 28) 3 | 38) 2 |
| 9) 3 | 19) 2 | 29) 4 | 39) 1 |
| 10) 2 | 20) 3 | 30) 1 | 40) 1 |

The National e-learning Portal for The General Education

### பகுதி II

**01. விடைகள்**

1) பொலிநிசனை அடக்கம் செய்வதற்கு முற்படுதல்
2) தனது செயலினை ஏற்றுக் கொள்வதும் தண்டனையை அனுபவிப்பதும் (03 புள்ளிகள்)

02.

- துணிந்த உள்ளம் கொண்டவள்
- சகோதர பாசம் உடையவள்
- தனது செயலினை ஏற்றுக் கொள்பவள்
- தண்டனையை ஏற்றுக் கொள்ளுபவள்
- மன்னனின் கட்டளையை மீறுபவள்

03. தனது கட்டளையை முதன்மையாகக் கொள்பவன்

- இரக்க குணம் அற்றவன்
- கர்வம் கொண்டவன்
- உறவு பாராட்டாதவன்
- இழப்புக்களை தாங்க முடியாதவன்
- அகங்காரம் கொண்டவன்
  போன்ற பல குணங்களை எழுத்துருவை மையமாகக் கொண்டு உதாரணங்கள் கூறி விளக்கியிருப்பின் புள்ளிகள் வழங்கவும்.

04.

1) உள்ளதை உள்ளவாறு எடுத்துக் கூறுவதுடன் அகத்தே இருக்கின்ற உண்மையினையும் அதன் பின் புலத்தையும் எடுத்துக்கூறுவது.
   தெரிவு, தொகுப்பாய்வு, பகுப்பாய்வு போன்ற விடயங்களுக்கு முதன்மை கொடுத்தல்

2) ஆம்

கதை, பாத்திரங்கள், வேடஉடை, ஒப்பனை மேடைப் பொருள்கள், காட்சியமைப்பு, நடிப்பு முறை போன்ற விடயங்கள் பொம்மை வீடு நாடகத்தில் யதார்த்தத்துடன் வெளிப்படும் முறைமையை நாடக எடுத்துருவுக்கூடாக விளக்கல்.

05.

1) சேக்ஸ்பியரின் அவலச்சுவை நாடகங்களில் ஒன்று

- வரலாற்றினை தழுவி கதை பொருள் தெரிவு செய்யப்பட்டது
- அவலநாயகனான சீசர் நாடக நிகழ்வோட்டத்தின் பாதியிலே இறக்கும் பண்பு காணப்படுகின்றது
- எல்லா வகையான நற்குணங்கள் இருந்தும் ஒரு தவறான காரணத்தினால் வீழ்ச்சி – சீசரிடம் முடிவினை மாற்றிக் கொள்ளாத தன்மை உறுதியாகக் கொண்டிருத்தல்
- சாதாரண வரலாற்றுச் சம்பவம் அவலச்சுவையுடன் வெளிப்படல்

2) சீசரின் பாத்திரப்பண்பு

- செனட் சபையின் தலைவர், வெற்றி வீரன்
- சிதறுண்டு கிடந்த சாம்ராச்சியத்தைஉருவாக்கியவர்
- பேராசைப் பண்பற்றவன்
- நாட்டுப் பற்றுடையவன்
- நட்பு பாராட்டும் பண்பு கொண்டவன்
- முடிவெடுத்தல் மாற்றாதவன்
- மனவுறுதி மிக்கவன்
- பொதுமக்களை நேசித்தார்

3) புரூட்டஸின் இயல்புகள்

- சீசரின் நட்புக்கு எதிர்பாராத தருணத்தில் துரோகம் இழைத்தவன்
- சீசரின் மீது பழி சுமத்தியவன்
- தனது பேச்சின் மூலம் மக்களை திசை திருப்புவன்
- பேச்சாற்றல் மிக்கவன்
- சூழ்ச்சிக்கு தலைமை வகித்தவன்

மார்க் அன்ரனியின் இயல்புகள்

- சமயோசித புத்தி உடையவன்
- பாதகமான சூழ் நிலையை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்பவர்
- உணர்ச்சி ஊட்டிடி பேசுபவர்
- நாட்டிற்காக பாடுபடுபவன்
- பழிவாங்கும் இயல்புடையவன்

4) ஒவ்வொரு பிரதேசங்களிலும் பயிலப்படும் கூத்துக்களை பட்டியலிட்டிருப்பின் புள்ளிகள் வழங்கவும்

5) காமன் கூத்து

அருச்சுனன் தபசு

பொன்னர் சங்கர் போன்ற கூத்துக்களை விளக்கியிருப்பின் புள்ளிகள் வழங்கவும்

6) பாரம்பரிய கூத்துக்களைப் பேணிப் பாதுகாத்தல் தொடர்பாக மாணவர்களின் கருத்துக்கள் பொருத்தமாக அமைந்திருப்பின் புள்ளிகள் வழங்கவும்.

The National e-Learning Portal for The General Education

06. குழந்தை ம. சண்முகலிங்கம்

- இவர் நடிகராக, எழுத்தாளராக, ஆய்வாளராக விமர்சகராக பேராசிரியராக பணி புரிந்து வந்தார்.
- நூறுக்கு மேற்பட்ட நாடகங்களை எழுதியவர்
- நவீன தமிழ் நாடக ஆசிரியராக பணி புரிந்த இவர் பாடசாலை நாடகங்கள், சிறுவர் நாடகங்கள், சமூக பிரக்ஞை மிக்க நாடகங்கள் பலவற்றை எழுதியவர்.
- புதுமை அரங்கினை கல்வி அரங்கச் செயற்பாடுகளுடாக முன் கொண்டு வந்தவர்.

Eg :- அன்னை சுட்ட தீ மண்சுத்த மேனியர் கூடி விளையாடு பார்ப்பா போன்றவற்றை குறிப்பிடலாம்.

**கணபதிப்பிள்ளை**

- இவர் ஒரு யதார்த்த நாடக ஆசிரியர்
- நா நாடகம், இரு நாடகம், வரலாற்று நாடகம் தழுவல் மொழி பெயர்ப்பு நாடகம் எனப் பிரிக்கப்படுகின்றது.
- யாழ்ப்பாணத்தின் மண் வாசைன ததும்பிய பேச்சு வழக்கினை தமது நாடகங்களில் கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது
- வேடஉடை, ஒப்பனை யதார்த்தமோடியில் காணப்படும்

**கலையரசு சொர்ணலிங்கம்**

- நவீன அரங்க முறையை ஈழத்தில் அறிமுகம் செய்தமை
- சொல்லாடல் அரங்கை பயில் நிலைக்கு உட்படுத்தியமை
- காட்சி விதானிப்பில் இயற்பண்புவாத முறையின் பயன்பாட்டிற்கு வழிவகுத்தமை
- காண்டவ நிலை மருட்கயை முனைப்புறுத்த மின் விளக்குகளைப் பயன்படுத்தியமை
- மத்தியதர வர்க்கத்தினருக்கு ஏற்ற நேரச் சுருக்கத்தை மேற் கொண்டமை

07. ஏதேனும் சிங்கள அரங்குகள் மூன்று பற்றி சிறுகுறிப்பு எழுதியிருப்பின் புள்ளிகள் வழங்கவும்.